**இயக்குநர் அலுவலகம்,**
**நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்,**
**கிண்டி, சென்னை– 600 025.**

**குறிப்பாணை எண். 4125/2023/ஆ1, நாள். 09.10.2023**

**பொருள்:** கணக்கு – நெடுஞ்சாலைத்துறை – நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் – சோதனைக் கட்டணங்கள் வருவாயை வைப்பு கணக்கு தலைப்பிலிருந்து வருவாய் தலைப்பிற்கு மாற்றுதல் – புதிய வருவாய் தலைப்பில் (1054–00–800–AV–22734) சோதனைக் கட்டணங்கள் செலுத்துவது – தொடர்பாக.

**பார்வை:**

1. சிறப்பு குறிப்பாணை எண். சோ.க/ஆ3/2018–19/ நாள். 28.03.2019.
2. அரசு கடித எண். 9761/எச்.ஆர்.1/2022–5, நாள். 23.08.2023.
3. இவ்வலுவலக குறிப்பாணை எண். 4125/2023/ ஆ1/நாள். 31.08.2023.

*******

பார்வை (3)–இல் காணும் இவ்வலுவலக குறிப்பாணையில் 01.09.2023 முதல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய சோதனைக் கட்டண வருவாய் இனங்களை வைப்பு கணக்கில் (8443–00–108–BY–80102) செலுத்துவதற்கு பதிலாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வருவாய் தலைப்பில் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1054–00 | – | சாலைகளும் பாலங்களும் |
| 800 | – | ஏனைய வரவுகள் |
| AV | – | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வரவுகள் |
| 227 | – | வரி அல்லாத கட்டணங்கள் |
| 34 | – | பரிசோதனைக் கட்டணங்கள் |
| IFHRMS (DPC: 1054–00–800–AV–22734) | | |

இதனைத் தொடர்ந்து, (E-Challan) செலுத்து சீட்டு தயார் செய்யப்படும் நேர்வுகளில் முரண்பாடுகள் உள்ளது தெரிய வருகிறது.

எனவே, சோதனைக் கட்டணங்கள் செலுத்த (E-Challan) செலுத்து சீட்டு தயார் செய்யும் போது DDO Code மற்றும் Account Code ஆகிய பதிவுகள், சரியாக மேற்கொள்ளப்படுவதில் கூடுதல் தனிக்கவனம் செலுத்துமாறு தொடப்புடைய கோட்டப்பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், தவறுதலாக செலுத்தப்பட்ட நிகழ்வில், சம்பந்தப்பட்ட கோட்டக் கண்காணிப்பாளரை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி கணக்குத் தலைப்பை சரி செய்யுமாறு அனைத்து கோட்டப் பொறியாளர்கள் (நெ)-களும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11/10/2023

**இயக்குநருக்காக,**
**நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென்னை-600 025.**

**பெறுநர்:**

அனைத்து கோட்டப் பொறியாளர்கள் (நெ)

அனைத்து துணை இயக்குநர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் உதவி இயக்குநர்கள், மண்டல ஆய்வகங்கள்.

**நகல் –** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை – 09.

**நகல் –** அனைத்து தலைமைப் பொறியாளர்கள் (நெ) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள்(நெ).